Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

# வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

**Vol. 68** நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன்; பின்னை ஏன் .... உன் மலைக்குப் பறந்து போ என்று சொல்லுகிறீர்கள் சங்.11:1 பெப்ரவரி 2022 No.2

## ஜெபக்கூடுகையை எழுப்புதலடையச் செய்வது எப்படி?

***How to resurrect the prayer meeting?***

Harold Vaughan

"நமது சபைகளில் நல்ல முன்னேற்றங்களைக் காண கிறிஸ்தவர் களின் எண்ணத்தில் ஜெபக்கூடுகை உயர் இடத்தில் வைக்கப்பட வேண்டும்" என்று சார்லஸ் ஸ்பர்ஜன் கூறியிருக்கிறார். அவருடைய ஊழியம் உரமேற்றப் பட்டது சூளை அறையால் என்பது உண்மை. அந்த அறையில் நூற்றுக்கணக் கான விசுவாசிகள் விசுவாசம் நிறைந்த ஜெபத்துடன் பரலோக வாசலைத் தட்டிக் கொண்டிருப்பார்கள். தனது ஊழியத்தின் வெற்றிக்குக் காரணம் தனது சபை மக்களின் ஜெபம்தான் என்று ஸ்பர்ஜன் குறிப்பிடுகிறார்.

### ஜெபக்கூடுகைகளை எழுப்புதலடையச் செய்வது எப்படி

#### 1. தேவனையே நோக்கமாகக் கொள்ள வேண்டும் :

கர்த்தர் கற்பித்த மாதிரி ஜெபம் 'எங்கள் பிதாவே' என்று ஆரம்பிக்கிறது. இறுதியில் தேவ மகிமையை வேண்டி நிறைவு பெறுகிறது. முதல் மூன்று வேண்டு தல்களும் தேவனுடைய நாமத்தையும் அவருடைய ராஜ்யத்தையும் அவரு டைய சித்தத்தையும் நோக்குகின்றன. உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்மு டைய சித்தம் செய்யப்படுவதாக மத்.6:9-10. மனிதனுடைய எந்த வேண்டுதலுக்கும் முன்பாக தேவநாமம் பரிசுத்தப்படுவதும் அவருடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப் படுவதும், அவரது சித்தம் செய்யப் படுவதும் முன்வைக்கப்படுவது அவசியம். எந்த ஜெபக் கூடுகையிலும் இவ்வாறு நாம் ஆரம்பிக்க வேண்டும்.

பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட காரணம் அவர்கள் ஒரு பெண்ணிலிருந்த அசுத்த ஆவியைத் துரத்தியதுதான். அவர்கள் எந்த ஜெபசங்கிலியோடும் தொடர்பு கொள்ளவில்லை. எந்த நியாய சங்கத்தையும் நாடவில்லை. அவர்கள் தேவனைப் பாடித் துதித்தார்கள் அப்.16:25. உதவிக்காக மனிதனைத் தேடாமலும், துன்பத்தால் துவண்டு அழுது புலம்பாமலும் அவர்கள் தேவனைத் துதித்துப் பாடினார்கள். இன்னொரு விதமாகக் கூறினால் ஆராதனையை அடிப்படையாகக் கொண்ட ஜெபக்கூடுகையை நடத்தி னார்கள்.

விண்ணப்பத்திற்கு முன்பாக துதி ஏறெடுக்கப்பட வேண்டும். ஆனால் தேவனை மகிமைப்படுத்தாமல் ஜெபத் தில் தேவைகளை மட்டும் முன்வைத் தால் நாம் தேவ வசனத்திற்கு எதிராக செயல்படுகிறோம். எனவே ஜெபக் கூடுகைகள் ஆராதனையுடன் ஆரம்பிக்க வேண்டும். பயங்கரமான பிரச்சனை களை சந்தித்தவர்கள்தான் தேவனை மையமாகக் கொண்ட ஜெபங்களை ஏறெடுத்திருக்கிறார்கள். உதாரணமாக தானியேலைக் குறித்து தானி.6:10-லும் எசேக்கியாவைக் குறித்து ஏசா.37:14-17 வசனங்களையும் படித்துப் பார்ப்போம்.

தேவனுக்கு முதலிடம் அளித்த பின்பு அனுதின உணவு, மன்னிப்பு, தீமையினின்று விடுதலை போன்ற தேவைகளுக்கு ஜெபிக்கலாம்.

#### 2. வேத வசன அடிப்படையில் ஏறெடுக்கப்பட வேண்டும் :

இயேசு கற்பித்த ஜெபம் நமது ஜெபங்களுக்கு ஒரு மாதிரியாயிருக்கிறது. அது நாம் ஜெபிப்பதற்கான ஒரு வழி காட்டி. அது ஒரு கட்டடத்திற்கான வரைபடம் போன்றது. ஒரு சரீரத்தின் எலும்புக்கூட்டிற்கு இணையானது.

**எங்கள் பிதாவே – தேவனை அறிந்து கொள்வது**

**உமது நாமம் பரிசுத்தப்படுவதாக – தேவ ராஜ்யம் விரிவடைதல்**

**உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக – தேவ சித்தம் நிறைவேற்றப்படுதல்**

**அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்குத் தாரும் – தேவைகளை தேவனிடம் கேட்பது**

**எங்கள் பாவங்களை மன்னியும் – பாவ அறிக்கை**

**எங்கள் கடனாளிகளுக்கு மன்னிப்பது போல – பிறரை மன்னிப்பது**

**எங்களை சோதனைகளுக்குட்படப் பண்ணாமல் தீமையிலிருந்து இரட்சியும் – சத்துருவிலிருந்து விடுதலை**

வேதவாக்கியம் கூறும் ஜெபம் வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் அடக்கி நமக்குப் போதிக்கிறது. இவ்வாறு தேவனை மையமாகக் கொண்டு ஆராதனையோடு ஜெபித்துப் பின்பு தற்கால சூழ்நிலைக்கு பொருத்தமாக ஜெபிக்கக் கற்பிக்கப்படுகிறோம்.

கூடி ஜெபிக்கும்போது வேத புத்தகத்திலுள்ள ஜெபங்களை வாசித்து விட்டு ஜெபிக்க ஆரம்பிக்கலாம். தலைவர் களாயிருப்பவர்கள் தங்கள் ஆவியில் எதிரொலிக்கிற வேதவாக்கியங்களை குறிப்பெடுத்துக் கொள்வதும் தூண்டு தலான வசனங்களுக்கு அதிக கவனம் செலுத்துவதும் நன்று. தற்காலத்துக்குப் பொருத்தமான வாக்குத்தத்தங்களைத் தெரிந்துகொண்டு அவற்றை முக்கியப் படுத்தியும் ஜெபிக்கலாம்.

நாம் வேதவசனங்களை வாசிக் கும்போது அவை நம்மை வாசிக்க வேண்டும். கர்த்தரே நமது செயலில் ஈடுபட வேண்டும். வேதவசனங்கள் மூலம் ஜெபிப்பது ஒரு சிறந்த கொள்கை யாகும்.

#### 3. ஆவியால் நடத்தப்படுவது

"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால் ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சு களோடு நமக்காக வேண்டுதல் செய் கிறார் ரோமர் 8:26.

ஜெபக்கூடுகைகளில் பொதுவாக பரிசுத்த ஆவியானவர் முக்கியப்படுத்தப் படுவதில்லை. அவர் ஒருவரே ஜெபத்தை வழிநடத்த தகுதியுள்ளவர். அவர் ஜெபத் தில் வாஞ்சையுடையவராயிருப்பதால் ஜெபிக்கும்போது பெருமூச்சுவிடுகிறார். அவரது தாக்கத்துடன் நாம் ஜெபிக்கும் போது தேவனுடைய பாரமுள்ள இருதயம் நமக்குக் கொடுக்கப்படுகிறது. ஜனங்களை ஜெபத்தில் நடத்த தேவ ஆவியானவர் நமக்கு உதவி செய்வார்.

ஆவியானவரோடு சரியான தொடர்புள்ள ஜெபம் பயன்தரக்

(3-ம் பக்கம் பார்க்க)

### அறிவிப்புகள்

1. வருகையின் தூதன் ஊழியத்தை உற்சாகமாய் தாங்கியும், குறிப்பாக வங்கி வழியாக காணிக்கை அனுப்பியும் பத்திரிகை வரத் தவறினால் தயவாய் தெரிவியுங்கள்.
2. ரசீது, நன்றி ஜெப கடிதம் இன்னமும் வராவிட்டால் தயவாய் தெரிவியுங்கள்.
3. சிறப்பு காணிக்கை அனுப்பிய அனைவருக்கும் ஒரு ஞாபகார்த்தம் அனுப்பியுள்ளோம். கிடைக்காவிட்டால் தயவாய் தெரிவியுங்கள்.

Mobile : ***9543221008***; Wattsapp : ***9489740295*** **ஆசிரியர்**

# வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

**2022-ம் ஆண்டு பத்திரிகை அனுப்ப**

**வருகையின் தூதன் ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.**


## நம்பிக்கைக்கு மிகப்பெரிய காரணம்

### *Great reason for hope*

Rich Carmicheal

அதற்கு அவர் : மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும் என்றார் லூக்.18:27. இந்த சத்தியம் கேட்க எளிமையாயினும் இதன் அடிப்படையில்தான் எல்லாமே நடைபெறுகின்றன. அதாவது தேவ பிரசன்னம் இருந்தால் மட்டுமே எதுவும் எந்த வேளையிலும் சாத்தியமாகக் கூடும். நல்லவை நடைபெற வேண்டுமென்று காத்திருக்கிறீர்களா? காலங்களல்ல அவர்தான் முதன்மையானவர். காலங்கள் அவர் கரத்திலுள்ளன. அவரை நம் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டால் நமது பணிகளெல்லாம் எளிதில் நடைபெறும். காலையில் மரணத்துக்குச் சமீபமாயிருப்பவர் மாலையில் மிக வல்லமையான ஜீவனோடிருக்க முடியும். நமது ஆண்டவர் : "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்றார். "உயிர்த்தெழுதலின் நாளில் லாசரு உயிரோடெழுந்திருப்பான் என்று நான் அறிவேன்" என்று மரியாள் சொன்னாள். அவள் உயிர்த்தெழுதலுக்கு ஒரு காலவரையறை வைத்திருந்தாள். ஆனால் "உயிர்த்தெழுதல் அங்கேயே அப்பொழுதேயே இருந்தது என்று T.ஆஸ்டின் ஸ்பார்க்ஸ் என்பவர் குறிப்பிடுகிறார்.

கிறிஸ்து நம்மில் வாசமாயிருந்து கிரியை செய்யும் போது எதனையும் சாதிக்க முடியும் என்பது உண்மையிலும் உண்மை. அவரை நாம் கொண்டிருக்கும் போது நமக்கு நம்பிக்கையுண்டு. சூழ்நிலையோ தேவையோ எதுவாயிருப்பினும் பரவாயில்லை. நமது பலவீனங்கள் அதிகமாகவும், கடினங்கள் அதிகமாகவும் இருக்கும்போதுதான் அவர் எவ்வளவு போதுமானவர்! எவ்வளவு கூடுமானவர் என்பதை நாம் கண்டுகொள்ள அதிக வாய்ப்பினைப் பெறுகிறோம். அவரை நாம் ஏறிட்டுப் பார்க்கும்போது அவர் நம்மைப் பார்த்து, 'என் கிருபை உனக்குப் போதும், உன் பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும்' 2 கொரி.12:9 என்பார். நாமும் அதற்குப் பதிலாக உடனடியாக "என்னைப் பெலப்படுத்து கிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" பிலி.4:13 என்று சொல்லுவோம். அவர் நமது பெலன் மட்டுமல்ல, நமக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமானவர்.

அவர் யார்? எப்படிப்பட்டவர்? எவைகளைச் செய்யக் கூடியவர்? என்பதை நாம் அறிந்திருப்பதால் எல்லா நிலையிலும் நமக்கு நம்பிக்கையுண்டு. விடுதலை, இரட்சிப்பு, பாவ மன்னிப்பு, பரிசுத்தமாக்கப்படுதல், ஆவிக்குரிய வெற்றி, எழுப்புதல் போன்ற அனைத்தையும் நாம் பெற்று மகிழலாம். "நிலைமைகளுக்கும் மனிதன் கூடாது என்று சொல்லுபவைகளுக்கும் நம்மை ஒப்புக்கொடாமல் அவரைப் பற்றிக் கொள்வோம். அவர் நமது எதிர்காலம். அவர் நமது சூழல். எதுவும் எந்த நேரமும் அவரது பிரசன்னத்தில் நடைபெறக் கூடும்" என்று T. ஆஸ்டின் ஸ்பார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

### ஜெபத்தின் வல்லமை

இவைகளையெல்லாம் மனதில்கொண்டு நமது கண்களையும் இதயத்தையும் கிறிஸ்துவுக்கு நேராக இழுத்து நமது சகல தேவைகளுக்கும் அவரையே சார்ந்து வாழுவோம்.

### வாசகர் கவனத்திற்கு

**உங்களில் சிலர் ரூபாய் 50, 100, 200 என்று அனுப்பியிருக்கிறீர்கள்; உங்களுக்கு ஏப்ரல் மாதம் வரை பத்திரிகை வரும்**

இன்னும் அதிகமாக ஜெபிப்போம். அதிக எதிர்பார்ப்புடன் ஜெபிப்போம். கிறிஸ்துவின் மூலம் "இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்" எபி.4:16.

நாம் ஜெபிக்கும்போது அவரது சர்வ வல்லமையைக் குறித்த வாக்குத்தத்தங்களை நினைவில் கொள்ளுவோம் யோவா.14:13, யோவா.15:7, 1 யோவா.5:14,15 ஆகிய வாக்குத் தத்தங்களைப் படிப்போம்.

தமது சபையிலுள்ள அநேக குடும்பங்கள் ஜெபத் திற்குக் கிடைத்த பதில்களைக் குறித்துச் சொன்ன சாட்சிகளை ஒரு சகோதரி என்னோட பகிர்ந்து கொண்டார்கள். மக்கள் மரணத்திலிருந்து விடுபட்டுள்ளார்கள். பயங்கரமான வியாதி களிலிருந்தும், பொருளாதார நெருக்கடிகளிலிருந்தும் விடுதலை பெற்றிருக்கிறார்கள். மதுவுக்கு அடிமையாயிருந்த வர்களின் கட்டுகள் அறுந்தது. இன்னும் அநேக அற்புதங்கள் நடந்தன. எங்கள் நடுவில் ஜெபத்தைக் கேட்டு தேவன் பெரிய காரியங்களைச் செய்தார். நீங்களும் உங்கள் முழங்கால்களை முடக்கினால் அனைத்துப் பிரச்சனைகளிலுமிருந்து விடுதலை பெறலாம்.

## ஆவிக்குரிய வாழ்வின் அருள்மாரி

### *Outpouring of spiritual life*

Charles H. Spurgeon (1834-1892)

"தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன், உன் சந்ததியின் மேல் என் ஆவியையும் உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்" ஏசா.44:3.

இது வார்த்தையிலும் கிருபையிலும் நிறைந்த வாக்குத்தத்தம். தாகமுள்ளவனுக்கு தண்ணீர் புத்துணர்வைத் தரும். வாடிய விருட்சங்கள் தண்ணீரால் புதுப்பொலிவு பெறும். அதுபோல ஆவியின் புதுக் கிருபையால் நமது வாழ்வு புத்துணர்வடையும். தண்ணீர் செடிகளில் தளிர்கள் தழைக்கவும், கனிகள் பக்குவமடையவும் தண்ணீர் செடிகளில் தளிர்கள் தழைக்கவும், கனிகள் பக்குவமடையவும் உதவுவது போல ஆவியின் கிருபை தேவனுடைய பாதையில் நம்மைப் பயனுள்ளவர்களாக்கும். தெய்வீகக் கிருபையின் நற்குணங்கள் அத்தனையையும் முழுமையாய் இதன் மூலம் பெறலாம். தெய்வீகக் கிருபையின் அனைத்து ஐசுவரியங்களாலும் நிரப்பப்பட இது ஒன்றே வழி. சில வேளைகளில் புல்வெளிகள் ஆறுகளாலும், வயல் நிலங்கள் குளங்களாகவும் மாறிவிடுவது போல, தாகமுள்ளவர்கள் நீரூற்றுகளால் நிரப்பப்படுவார்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)


**கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:**

**வருகையின் தூதன்**
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
**Ph. :** 95432 21008

**VARUKAYIN THOOTHAN**
Newport Street,
Nagercoil-629 001.
**Ph. :** 95432 21008

**காசோலை** *(Cheque & Draft)*
**வெஸ்லி தேவதாசன்** (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

**வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்**
உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள்
Mobile : 95432 21008, 9489740295, e-mail:varukayinthoothan@hotmail.com

**பத்திரிகை பணி**
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

**வருகையின் தூதன் உபவாச ஊழியம்**
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

**முன்னேற்றப்பணி**
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

கூடியது. தனது கையில் ஒரு நூலை பென் பிராங்க்ளின் பிடித்திருப்பதை புயல் மிகுந்த ஒரு நாளில் ஒருவன் கண்டு என்ன செய்கிறீர்? என்று அவரைக் கேட்டபோது தாம் பட்டம் பறக்க விடுவதாக அவர் பதிலளித்தார். 'பட்டத்தை என்னால் பார்க்க முடிய வில்லையே' என்று அந்த மனிதன் கூறியபோது 'அதை நான் பார்க்க முடியாவிட்டாலும் அதின் ஈர்ப்பை நான் உணருகிறேன்' என்றாராம். தேவ ஆவியானவரையும் நான் பார்க்க முடிவதில்லை. ஆனால் அவரது கிரியையை நாம் உணர முடியும். மாம்சம் நம்மை ஜெபத்திலே வழிநடத்துவ தில்லை. தேவ ஆவியானவர் ஒருவரே தேவனுடைய உள்ளத்தையும் எண்ணத் தையும் அறிகிறவர். எனவே ஆவியான வருடைய தூண்டுதலின்போது அவரோடிணைந்து கிருபாசனத்தைக் கிட்டிச் சேருவோம்.

### 4. விசுவாசத்தில் நிரம்பியிருக்க வேண்டும்

வேத அடிப்படையிலான ஜெபம் ஒரு பதிலை எதிர்பார்க்கிறது. எனவே பெற்றுக்கொள்ளும் முன்ப தாகவே துதிக்கலாம். பதில் கிடைத்த பின்பு துதிப்பது சதாரணமானது. ஆனால் விசுவாசம் நிறைந்த ஜெபம் பதில் வருவதற்கு முன்பாகவே துதி ஏறெடுக் கக்கூடியது. விசுவாசத்தின் முதற்படி துதியாகும்.

இக்கால சபை அங்கத்தினருக்கு தோமா ஒரு எடுத்துக்காட்டு. மற்ற சீஷர்கள் எல்லாரும் கர்த்தரைக் கண் டோம் என்று அவனிடம் சொன்ன போது, தான் கண்ணாரக் கண்டு கையால் தொட்டால் மாத்திரமே விசுவாசிப்ப தாகக் கூறினான் யோவா.20:25. பின்பு இயேசு தாமே முன்பாக நின்று "நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார், உன் கையை நீட்டி என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசி யாயிரு" என்றார் வச.27. அவரைக் கண்ட போது தோமா விசுவாசித்தான். அவனைப் பார்த்து இயேசு, "தோமாவே நீ என்னைக் கண்டதினாலே விசுவாசிக் கிறாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிற வர்கள் பாக்கியவான்கள்" வச.29 என்றார். எனவே விசுவாசத்துடன் ஜெபிப்பது அவசியம். கேள்விக் குறியுடனும், ஆச்ச ரியக் குறியுடனும் ஜெபிப்பது கூடாது.

### 5. மேய்ப்பரால் நடத்தப்படும் ஜெபம்

ஆதித் திருச்சபையை மேய்த்த அப்போஸ்தலர்கள் இரு முக்கிய பணிகளைச் செய்தனர். அவை வேத வசனம், ஜெபம் என்பவைகளாகும் அப்.6:4 வாசிக்க. இவற்றில் ஜெபம் முதலிடம் பெறுகிறது. அப்போஸ்தலர் ஜெபத்தோடு ஆதித்திருச்சபையும் ஜெபிக்க வழிநடத்தி படிக்கிறார்கள்.

கணக்கெடுப்புகளில் போதகர் கள் ஞாயிறு ஆராதனை செய்தியை ஆயத்தம் செய்ய பல மணி நேரங்களைச் செலவிடுவதாகவும் ஆனால் ஜெபக் கூடுகைக்கான ஆயத்தத்தில் மிகக் குறை வாகவே சமயம் செலவிடுவதாகவும் அறிகிறோம். அதற்கேற்ற ஜெபக்கூடுகை யில் பங்கெடுக்கிறவர்களின் எண் ணிக்கையும் காணப்படுகிறது. போதிப்ப தில் கவனம் செலுத்துவது போல அதைக் கடைபிடிப்பதில் ஏன் தவறிவிடுகிறோம்?

சபையின் செயல்பாடுகளில் அதிக கவனம் செலுத்தும் நாம் இணைந்து ஜெபிப்பதின் மூலமாகவே தேவ பிரசன்னத்தைப் பெறமுடியும் என்பதை மறந்து விடுகிறோம். ஆதித் திருச்சபை ஜெபத்திற்கு முக்கியத்துவம் அளித்து மேய்ப்பர்கள் சபை கூடி ஜெபிக்க வழி நடத்தினார்கள். எனவே மேய்ப்பரின் முக்கிய கடமை ஜெபக்கூடுகையை பலப்படுத்துவதும் விழிப்படையச் செய்வதுமாகும். உங்கள் சபை ஜெப வீடாக மாற முயற்சிப்பீர்களா?

### ஜெப வீட்டினைக் கட்டுதல்

அனேக சபைகள் ஆராத னையைத் துவக்கவும் முடிக்கவும் மட்டுமே ஜெபத்தை பயன்படுத்து கின்றன. வாரநாட்களில் நடைபெறும் ஜெபக்கூடுகைகளில் ஒரு சிலரே பங்கெடுக்கின்றனர். ஜெபத்தைக் குறித்து எவ்வளவு தான் பிரசங்கித்தாலும் சேர்ந்து ஜெபிக்காவிட்டால் சபையில் எந்த மாறுதலும் ஏற்படாது.

உங்கள் சபையின் ஜெபக் கூடுகைகளைக் குறித்து ஜெபியுங்கள். தேவன் கொடுக்கிற ஆலோசனைகளின் படி செய்யுங்கள்.

- **பாடலும் துதியும் இணைந்து காணப்பட வேண்டும். ஆவியால் நிரப்பப்பட்ட ஒருவர் பாடலை நடத்துவது சிறந்தது. சந்தோஷமான பாடல்களுக்குப் பின் செய்தி கொடுக்கப் படலாம். பின்பு மறுபடியும் பாடல்களைப் பாடலாம்.**
- **ஜெபக்கூடுகை நீளமாயிருப்பதைவிட உயிரோட்டமாயிருக்க வேண்டும். சில வேளை களில் சிறு குழுக்களாகவும் பிரிந்து ஜெபிக் கலாம். குடும்பங்களாகவும் தனியாகவும் சத்தமாகவும் ஜெபிக்கலாம். பாரத்தோடு ஜெபிப்பதும் வியாதியஸ்தருக்காகவும் இரட்சிக்கப்படாதவர்களுக்காகவும் ஜெபிப்பது அவசியம்.**
- **தேவைகள் தேவனை நோக்கமாகக் கொண் டிருக்க வேண்டும். அவை மனித அடிப்படையா யிருக்கக்கூடாது.**
- **தேவைகளைப் பேச்சில் அல்ல ஜெபத்தில் வெளிப்படுத்த வேண்டும். விசுவாசத்துடன் ஜெபிக்க உற்சாகப் படுத்த வேண்டும்.**
- **பதிலளிக்கப்பட்ட ஜெபங்களுக்கு துதி ஸ்தோத் திரங்களை ஏறெடுக்க வேண்டும்.**

## தூய ஆவியானவரும் ஜெபமும்

***The Holy Spirit and Prayer***

Andrew Murray (1828-1917)

தூய ஆவியானவரை மிகவும் அதிகமாக துக்கப்படுத்துவது சபையின் ஜெபக்குறைவாகும். தூய ஆவியானவர் நம்மை நடத்தும்படியாக நாம் ஆயத்த மில்லாதிருப்பதால் நம்மில் நாம் வல்லமை யற்று காணப்படுகிறோம். தூய ஆவி யானவரின் கிரியை நாம் களிகூரவும் நமது விசுவாசம் பெருகவும் ஏதுவாயிருப் பதாக.

தூய ஆவியானவர் 'ஜெபத்தின் ஆவியானவர்' சக.12:10 'கிருபையின் ஆவி' என்றும், விண்ணப்பத்தின் ஆவி என்றும் குறிப்பிடப்படுகிறார் ரோமர் 8:15-ல் "அந்தப்படி திரும்பவும் பயப் படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்" என்றும் கலாத். 6:6-ல் "நீங்கள் புத்திரரா யிருக்கிறபடியினால் அப்பா பிதாவே என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார் என்றும் பவுல் எழுதுகிறார். அப்பா பிதாவே என்ற பெயரால் நமது இரட்சகராகிய இயேசு பிதாவுக்கு மிகப்பெரிய விண்ணப் பத்தை ஏறெடுத்தார். அதோடு தமது வாழ்வையும் அன்பையும் முழுமையான அர்ப்பணிப்பையும் தியாகத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார். தூய ஆவி யானவர் நமது கிறிஸ்தவ வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே சிறுபிள்ளையைப் போன்ற நம்பிக்கையுடன் முன்னேற நமக்குப் போதனை செய்கிறார்.

இவ்வாறு ஜெபம் முக்கியத்துவம் பெறும்போது, தூய ஆவியானவர் சபையில் அந்நியராகவும், ஜெபம் ஒரு பாரமான பணியாகவும் இருப்பதில்லை. பிதா நாம் ஜெபிக்கும்படி கற்றுத்தர ஏற்படுத்திய தெய்வீகப் போதகருக்குக் கீழ்ப்படியாமலிருப்பது ஜெபத்திற்கு நாம் காண்பிக்கும் நிர்விசாரத்தைக் காண்பிக்கிறது.

இந்த சத்தியத்தை அதிகமாக அறிந்து கொள்ள ரோமர் 8:26,27 வசனங்களைப் படிப்போம். கிறிஸ்தவர் களாகிய நாம் ஜெபிக்கக் கூடாதவர் களாயிருப்பதால் தேவன் தாமே இறங்கி வந்து, நமது நம்பிக்கையற்ற நிலையில் நமக்கு உதவி செய்ய தூய ஆவியான வரை நமக்கு அருளியிருக்கிறார். நமது எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் மேலாக அவர் கிரியை செய்வதால் தேவன் ஜெபத்தைக் கேட்கிறார்.

எனவே ஜெபிக்கும்போது முதலாவது தூய ஆவியானவர் நம்மில் தெய்வீக செயலாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு ஜெபிக்க வேண்டும். நமது அறிவீனமான வார்த்தைகளுக்கும், அதிக வசனிப்புக்கும் இடமளிக்கக் கூடாது. நாம் தூய ஆவியானவருக்கு இடமளித்து, அவருக்கு முக்கியத்துவம் அளிக்கும் போது நமது பயபக்தியும், அமரிக்கையும் பெருகி ஆவியானவரது உதவியால் தேவனுக்கு முன்பாக நமது தேவைகளை முன்வைக்க முடியும். எனவே முதலாவது நம்மை தூய ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். பின்பு அவரையே சார்ந்து ஜெபிக்க வேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

அவர் மூலமாகவே உங்கள் ஜெபம் விலையேறப்பெற்றதாக மாறும்.

மந்த நிலைக்கு எதிரான பாதுகாவலும் விசுவாசமும் உள்ளான மனதில் ஏற்படுகிறது. ஒவ்வொரு ஜெபத்திலும் திரியேக தேவன் பங்கெடுக்கிறார். பிதா ஜெபத்தைக் கேட்கிறார். குமாரனின் பெயரில் ஜெபிக்கிறோம். ஆவியானவர் நமக்காக நம்மிலிருந்து ஜெபிக்கிறார்.

### ஜெபிக்கும் போது நாம் கவனிக்க வேண்டியவை

**1. தேவ குமாரனின் ஆவியாகிய பரிசுத்த ஆவியானவர் நம்மில் இருக்கிறார் என்ற தெய்வீக சத்தியத்தை உறுதியாக விசுவாசிக்க வேண்டும்**

இந்த எண்ணம் மிகப்பெரியதும் தெய்வீகமானதுமாகும். இது நமது இருதயத்தில் புகுந்து தூய ஆவியானவரால் அங்கு நிலைத்திருக்கிறது. "ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார்" ரோமர் 8:16. நமது இருதயம் தேவனுடைய ஆலயம் என்பதை நாம் நிச்சயமாய் அறிந்திருக்க வேண்டும். அவர் நம்மில் வாசம் பண்ணி நமது ஆத்துமாவையும் சரீரத்தையும் ஆளுகிறவர். ஜெபிக்கும் போது தேவனை அதிகமாகத் துதிப்போமாக. துதி நமது இருதயங்களை தேவனோடு இணைந்திருக்கச் செய்யும். நமது கவனத்தை நம்மிலிருந்து திருப்பி தேவனுக்கு இடமளிக்கும்.

**2. ஆவியானவர் நம்மில் வாசம் பண்ணி கிரியை செய்வதின் நிச்சயம் நம்மிலிருந்தால், அவர் நம்மில் நிறைவேற்றவிருக்கும் எல்லாவற்றையும் குறித்து புரிந்து கொள்வது அவசியம்**

ஜெபத்தின் மூலம் அவர் கிரியை செய்வது அவர் செய்யும் பிற செயல்களோடு மிகுந்த தொடர்புடையது. அவரது முதற் பணியும் மிகப்பெரிய பணியுமாயிருப்பது கிறிஸ்துவையும் அவரது அன்பு வல்லமை ஆகியவற்றின் சிறப்பை வெளிப்படுத்துவதாகும். ஜெபிக்கும்போது ஆவியானவர் கிறிஸ்துவையும் அவரது இரத்தம், நாமம் ஆகியவை ஜெபம் கேட்கப்படுவதற்கு ஏதுவாயிருக்கின்றன என்று ஞாபகப் படுத்துகிறது.

மேலும் ஆவியானவர் தூய்மையின் ஆவியானவராக பாவத்தைக் கண்டறியவும் அதை வெறுக்கவும் அப்புறப்படுத்தவும் போதிக்கிறார். அவர் ஒளி, ஞானம் ஆகியவற்றின் ஆவியானவருமாயிருக்கிறார். தேவனுடைய நிரம்பி வழியும் இரக்கத்தின் பரலோக இரகசியத்திற்கு நேராக நம்மை வழி நடத்துகிறார். மேலும் அன்பு வல்லமை ஆகியவற்றின் ஆவியானவருமாயிருக்கிறார். எனவே கிறிஸ்துவுக்கு சாட்சியாயிருக்கவும், மிகுந்த பரிவுடன் ஆத்துமாக்களுக்காக உழைக்கவும் போதிக்கிறார். இந்த ஆசீர்வாதங்களையெல்லாம் ஆவியானவரோடு நாம் தொடர்புபடுத்தும் போது அதிகமாக அவரது தேவத்துவத்தை அறிந்து கொள்ளவும் நம்மை அவர் வழிநடத்துவதற்கு ஒப்படைக்கவும் ஜெபம் அநுகூலமாயிருக்கிறது. ஆவியானவரை ஜெபத்தின் ஆவியானவராகக் கொள்ளும் போது வாழ்க்கையில் பெரிய மாற்றங்களைக் காணலாம்.

**3. ஆவியானவர் நமது வாழ்வை முழுவதுமாக சொந்தமாக்கிக் கொள்ள விரும்புகிறார்**

ஆவியானவருக்காக அதிகமாக ஜெபிக்கும்போது ஆவியானவர் நம்மை இன்னும் அதிகமாக ஆட்கொள்ள விரும்புகிறார். எனது ஆத்துமாவுக்கு எனது சரீரம் முழுவதுமான வாழிடமாயிருப்பதுபோல தூய ஆவியானவர் எனது சரீரத்தையும் ஆத்துமாவையும் தமது வாழிடமாகக் கொண்டு முற்றிலும் தமது ஆளுகைக்குள் ஆக்கிவிடுவார். உத்தமமாக வாழ்ந்து கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் ஆவியானவர் தங்களை ஒரு புதிய அர்ப்பணத்திற்கு வழி நடத்துவதை உணரமுடியும். என் முழு இருதயத்தோடும் உம்மைத் தேடுகிறேன் என்று சொல்ல ஆவியானவர் நமது நோக்கத்தை வெளிப்படுத்த செய்வார். இரு மனம் நம்மிலிருந்தால் அது பாவம் என உணரச் செய்வார். கிறிஸ்துவே சர்வ வல்ல விடுதலையாளர். அவர் பாவத்திலிருந்து நம்மை விடுவிக்க எப்போதும் நம் அருகிலிருக்கிறார். நம்மைப் பாதுகாத்து மன்றாட்டு வீரர்களாகப் பழக்குவிக்கிறார். இதன் மூலம் தமது திட்டங்களை நம்மைக் கொண்டு நிறைவேற்றுவார்.

ஆவியானவரை நாம் அறிந்து கொள்ளவும் அவரை ஜெபத்தின் ஆவியானவராகக் கனம் பண்ணவும் தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக.

## ஜெபமும் ஊழியங்களும்

### *Prayer and Missions*

E.M.Bounds (1835-1913)

இயேசுக் கிறிஸ்துவின் ஆவி ஊழியங்களின் ஆவி என்று கூறலாம். அவர்தான் இவ்வுலகின் முதல் மிஷனெறி என்று சொல்லலாம். அவருடைய வாக்குத்தத்தமும் வாஞ்சையும் முதல் மிஷனெறி இயக்கம் உருவாக காரணமாயிருந்தன. மிஷனெறி ஆவி என்பது சுவிசேஷத்தில் ஒரு முகமோ இரட்சிப்பின் திட்டத்தின் தோற்றமோ அல்ல. அது ஆவியும் ஜீவனுமானது. மிஷனெறி இயக்கம் என்பது கிறிஸ்துவுக்காக உலக முழுவதிலுமுள்ள மனித சமுதாயத்தை சொந்தமாக்கிக் கொள்ள கிறிஸ்துவின் சபை படையெடுத்துச் செல்ல வேண்டும். தேவ ஆவியால் தொடப்பட்டவர்கள் மிஷனெறி ஆவியால் தூண்டப்படுகிறார்கள்.

அனைத்து மிஷனெறி ஊழியத்தின் வெற்றியின் காரணி ஜெபமென்றால் மிகையல்ல. இல்ல சபைகளின் கரத்தில்தான் அதன் சாவி காணப்படுகிறது. இந்தக் கடைசி போராட்டத்தில் சபை முழங்காலில் நின்று உபவாசத்தோடு ஜெபிப்பது ஆவிக்குரிய உதவி. அதன் மூலம் இறுதி போராட்டத்தில் வெற்றிபெற பெலன் கிடைக்கிறது. பொருளாதார உதவி பெரிதல்ல. பெரிய இயந்திரங்கள் கூட அளிக்க முடியாத வல்லமை ஜெபத்தினால் ஏற்பட முடியும்.

மிஷனெறிப் பணிக்காக மக்களிடம் உதவி பெற வேண்டியதுதான். ஆனால் அவர்களுக்காக ஜெபிப்பது மிகமிக முக்கியம். அதிக பணமிருந்தாலும் ஜெபமில்லாவிட்டால் ஊழியம் வல்லமையற்றுப் போய்விடும்.

ஏசாயா தீர்க்கதரிசி நூற்றாண்டுகளுக்குப் பின்னாகத் திரும்பிப் பார்த்து தொடர்ந்து ஜெபிப்பதின் நோக்கத்தைக் குறிப்பிட்டு, கிறிஸ்துவின் அரசு மக்களிடம் கட்டப்படும் வரை தேவனுக்கு இளைப்பாறுதல் அளிக்கக்கூடாது என்கிறார். சீயோனினிமித்தமும் எருசலேமினிமித்தமும் நான் மவுனமாயிராமலும் அதின் நீதி பிரகாசத்தைப் போலவும், அதின் இரட்சிப்பு எரிகிற தீவட்டியைப் போலவும் வெளிப்படுமட்டும் அமராமலும் இருப்பேன் ஏசா.62:1.

இறுதியாக கிறிஸ்தவ சபையின் வெற்றியைக் குறித்து : "ஜாதிகள் உன் நீதியையும், சகல ராஜாக்களும் உன் மகிமையையும் காண்பார்கள்; கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்" ஏசா.62:2.

அதன் பின்பு, தீர்க்கனைக் கொண்டு, எருசலேமே, உன் மதில்களின் மேல் பகல் முழுதும், இரா முழுதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன். கர்த்தரை பிரஸ்தாபம் பண்ணுகிறவர்களே, நீங்கள் அமரிக்கையாயிருக்கலாகாது, அவர் எருசலேமை ஸ்திரப்படுத்தி, பூமியிலே அதைப் புகழ்ச்சியாக்கும் வரைக்கும் அவரை அமர்ந்திருக்க விடாதிருங்கள் ஏசா.62:6-7. கர்த்தரைப் பிரஸ்தாபம் பண்ணுகிறவர்களை கர்த்தரை நினைவு கூருகிறவர்கள் என்றும் பொருள்படுத்தலாம். ஏனென்றால் அவர் வாக்குத்தத்தம் பண்ணினவைகளை எப்போதும் ஜெபத்தின் மூலமாக நினைவு கூருகிறவர்கள் தேவனுடைய ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்படும் வரைக்கும் இளைப்பாறக் கூடாது.

கர்த்தருடைய ஜெபத்தில், தேவ ராஜ்யம் கட்டப்படுவதும், சுவிசேஷம் பரப்பப்படுவதும் கூறப்பட்டுள்ளன. 'உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலும் செய்யப்படுவதாக' மத்.6:10.

உத்தமமான ஜெபம் மிகப்பெரிய ஆவிக்குரிய விசையாகும்.

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

ஆண்டவராகிய இயேசு தமது அரசினை முழுமையாக சொந்தமாக்கிக் கொள்ளும் போது, புறஜாதியாரையும் உலகின் கடைமுனைவரை உள்ள மக்களையும் சொந்தமாக்கிக் கொள்வார்.

உத்தமமாக ஜெபிக்கிற ஒருவன் இவ்வுலகில் கிறிஸ்துவின் கரத்திலுள்ள மிக சக்திவாய்ந்த ஆறுதல் என்று கூறலாம். ஜெபிக்கும் ஒரு சபை நரகத்தின் அனைத்து வாசல்களை விடவும் வலுவானது.

"என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்த மாகவும் கொடுப்பேன்" சங்.2:8 என்ற வசனத்தில் கூறப்பட்டபடி அதன் நிறை வேறுதலுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டியது அவசியம் எனக் காண் கிறோம். இன்று மிஷனெறிப் பணிகளில் அதிக வெற்றியில்லாமைக்குக் காரணம் ஜெபக் குறைவே! நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினால், உங்களுக்குச் சித்திக்கிறதில்லை" யாக்.4:2.

அறுவடை பெரிதாயிருக்கிறதா? வேலையாட்கள் குறைவா. மத்.9:38-ன் படி 'ஆதலால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப் பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங் கள் என்றார்". பூமியிலே தேவையான அறுவடைநிலங்களுக்குக்கூட்டமாகவேலை யாட்களை அனுப்பும்படி சபையிலே ஜெபம் அலைஅலையாக எழும்பட்டும்.

இன்று மன்றாட்டு வீரர் அதிக மாகத் தேவை. முதலாவது அறுவடை நிலங்களுக்காக ஜெபிப்போம். சுவி சேஷத்தை இன்னும் அறியாத மக்களுக் காக பாரத்தோடு ஜெபிப்போம். பின்பு அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும் படி தேவனிடம் வேண்டிக் கொள்வோம்.

# ஜெபம் என்பது முக்கியமாக தேவனோடு ஐக்கியமாகும்

## *Prayer is essentially union with God*

Robert O. Bakke

ஜெபம் என்பது தேவனோடுள்ள மிக முக்கிய உறவாகும். இது சக்தி வாய்ந்ததும் அளவிடக்கூடாததுமான செயல். இது கிறிஸ்தவனின் ஆவிக்குரிய நிலையை வகையறுக்க ஏதுவானது.

ஜெபத்தின் மூலம் நாம் நமது எண்ணங்களையும் வாஞ்சைகளையும் தேவனுடைய பாதத்தில் ஊற்றிவிட்டு அவரிடமிருந்து ஜீவன், வல்லமை, நற்குணம், அவரது அதிகாரம் ஆகிய வற்றைப் பெறுகிறோம்.

இந்தியாவுக்கு மிஷனெறியாக வந்த ஸ்டான்லி ஜோண்ஸ் இவ்வாறு எழுதியிருக்கிறார் : "ஜெபத்தில் முதல் முதலாக நாம் தேவனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவரைப் பெற்றுக் கொண்டால் மற்றவையெல்லாம் தாமாகவே தொடர்ந்து வரும். தேவன் உங்களைப் பிடித்துக் கொள்ளவும், உங்களை ஆட்கொள்ளவும் அவருக்கு உங்களை முழுவதும் சொந்தமாக்கிக் கொள்ளவும் அனுமதியுங்கள். அப்படிச் செய்தால் அவரே தமது ஜெபங்களை உங்கள் மூலமாக ஊற்றுவார். எனவே ஜெபங்கள் தேவனால் தூண்டப்பட்ட வைகளாகவும், அதனால் தேவனால் பதிலளிக்கப்படுபவைகளாகவுமிருக்கும்."

ஜெபம் என்பது பைன் மரத்தின் வெட்டப்பட்ட பகுதியிலிருந்து பிசின் கசிந்து வடிந்து வருவதற்காகக் கட்டப் பட்ட பாத்திரம் என்று ஒப்பிட்டுக் கூறலாம். ஜெபத்தின் மூலம் நீங்கள் தேவனுடைய விலாவின் காயத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் விரும்பினால் அல்லது தேவ கிருபை உங்கள் பாத்திரத்தை நிரப்ப அனுமதித் தால் தேவனுடைய ஜீவன் அதை நிரப்பும்.

எனது தகப்பனார் தமது வாழ் வின் கடைசி நேரத்தில் பேசிய வார்த்தை களை நான் நினைவுகூருகிறேன். தமது 64-வது வயதில் அவர் மூளையில் ஏற் பட்ட கட்டியினால் மரித்துக் கொண்டி ருந்தார். நான் ஒரு வாலிபப் போதகரா யிருந்தேன். வார இறுதிகளிலெல்லாம் எனது சபையிலிருந்து பெற்றோரின் வீடிருந்த நியூஜெர்சிக்குச் செல்வேன். அப்பா அதிகமாகவும் தூக்கத்திலிருப் பார். அவர் படுக்கையினருகில் நான் முழங்காற்படியிட்டு ஜெபிப்பேன். திங்கள் வீடு திரும்புவேன்.

கடைசி முறை இவ்வாறு நான் வீடு திரும்பியபோது எல்லாம் சரியாகி விடும் என்றேன். என் தந்தை மெதுவாக எழுந்து நான் அவரருகில் செல்லும்படி சைகை காட்டினார். அவரிடம் சென்று குனிந்தபோது அவர் தமது கரத்தை என் கழுத்தின் பின்புறமாக நடுக்கத்தோடு வைத்து தனது கன்னத்திற்கு நேராக இழுத்தார். அவரது கண்களிலிருந்து வடிந்த கண்ணீர் என் கன்னங்களை நனைத்தது. என் காதுகளில் மெதுவாக 'நான் உன்னை நேசிக்கிறேன்; நீ போய் வருக' எனக் கூறினார். இந்த சில வார்த்தைகளில் மில்லியன் கருத்துக்கள் அடங்கியிருந்தன. முப்பத்து மூன்று ஆண்டுகளாக என்னைப் பாசத்தோடு வளர்த்த என் தந்தையின் பிரிவு எனக்குக் கண்ணீரை வரவழைத்தது.

### என்னில் நிலைத்திருங்கள்

இயேசு தாம் மரிக்க வேண்டி யதற்கு முந்திய இரவிலே நமது அருமை நண்பர்களை அருகில் அழைத்தார். மிகவும் முக்கியமான காரியங்களைப் பேசக்கூடிய வேளையாக அது இருந்தது. கூடுமானால் அவர்களைத் தமது மார் போடு அணைத்திருப்பார், அவர்களில் ஒருவர் தம்மைக் காட்டிக் கொடுக்கப் போவதையும், ஒருவன் மறுதலிக்கப் போவதையும், தாம் மரணமடையப் போவதையும் அவர் குறிப்பிட்டபோது அவர்களால் நம்ப முடியவில்லை (யோவான் 15:1-8 படிக்க)

இந்த வார்த்தைகளின் மதிப்பை முழுவதுமாக கிரகிக்க சில மொழிகளில் அதை மறுபடியும் மறுபடியும் கூறுவ துண்டு. எடுத்துக்காட்டாக இயேசு மெய்யாகவே மெய்யாகவே என்று அதா வது கவனமாகக் கேளுங்கள் என்று கூறு கிறார். தேவ சிங்காசனத்தின் முன்பாக நின்று சேவிக்கும் தூதர்கள், தேவனை பரிசுத்தர் பரிசுத்தர் என்று புகழுகின்ற னர். கேரூபின்கள் இதற்கு மேலாக பரிசுத் தர், பரிசுத்தர், பரிசுத்தர் என முழங்கு கின்றனர். தேவனைப் போன்ற மிக மிகப் பரிசுத்தமானவர் எவருமில்லை.

இயேசு சொன்ன வார்த்தை களை கவனிப்போம். 'என்னில் நிலைத் திருங்கள்.... நிலைத்திருங்கள் ..... நிலைத் திருங்கள் .... என்னில் நிலைத்திருங்கள்; என் வார்த்தைகள் உங்களில் நிலைத் திருந்தால் கனிகொடுப்பீர்கள்..... அதிக கனிகொடுப்பீர்கள்..... பிதாவின் மகிமைக்காக வாழுவீர்கள். ஆனால் நீங்கள் என்னில் நிலைத்திராவிட்டால் வாடி உலர்ந்து போவீர்கள். என்னாலன்றி உங்களால் எதுவும் செய்யக்கூடாது.

கிறிஸ்துவில் நாமும் நம்மில் கிறிஸ்துவும் நிலைத்திருக்க முக்கிய வழி ஜெபம் ஒன்றே. நாம் ஜெபிக்கும் போது தேவனோடுள்ள உறவு வெளிப்படுகிறது.

### ஜீவனைக் கொடுப்பதும் பெற்றுக் கொள்வதும்

யோவான் 17:20-26 இயேசுவின் பிரதான ஆசாரியத்துவத்துவ ஜெபத் தைக் காண்கிறோம். தமது சீஷருக்காக ஜெபித்த பின்பு நமக்காகவும் ஜெபிக் கிறார் (படிக்க)

இயேசு பிதாவிடம் தம்மை ஊற்றி ஜெபித்ததுபோல தமது பிதா விடமிருந்து பெற்றுக் கொள்ளவும் செய் தார். "நானும் பிதாவும் ஒன்றாயிருக் கிறோம்" என்ற ஜெபம் அவர்களது ஒன்றிணைப்பை வெளிப்படுத்துகிறது. சிலுவைக்கு முன்பாக பிதாவுக்கும் குமார னுக்குமுள்ள ஐக்கியத்தை வெளிப் படுத்தும் ஒரு அளவிடக்கூடிய செயலாக அவரது ஜெபம் காணப்பட்டது. மேலும் இந்த ஜெபமாகிய கருவி மூலம் பிதா தம்மைக் குமாரனில் ஊற்றியதை வெளிப்படுத்துகிறார்.

"ஜெபத்தைக் குறித்த முக்கிய கேள்வி வார்த்தைகள் மட்டுமோ, ஒரு மத பாரம்பரியமோ, வாக்குத்தத்தங்களை பெற்றுக்கொள்வதோ மட்டுமல்ல, அது உங்கள் வாழ்வை தேவனுக்குக் கொடுத்து விடுவதும் தேவனுடைய ஜீவனைப் பதிலாகப் பெற்றுக்கொள்வதுமாகும்". "ஜெபம் என்பது ஜீவனுள்ள ஆத்து மாவுக்கு தேவனோடுள்ள தொடர்பு ஆகும். ஜெபத்தில் தேவன் குனிந்து மனிதனை முத்தமிட்டு ஆசீர்வதித்து மனித தேவைகளுக்கெல்லாம் உதவி செய்கிறார்" என்று C.M.பௌண்ட்ஸ் குறிப்பிட்டுள்ளார். ஜெபம் செய்யும் போது நாம் அவரில்தான் எல்லாவற் றையும் பெற்றுக்கொள்கிறோம் என்று அறிக்கையிடுகிறோம். இந்த உலக வாழ்வு, மரணம், நிகழ்காலம், வருங் காலம் யாவும் நமக்குரியவை. ஏனெனில் நாம் கிறிஸ்துவுடையவர்கள். கிறிஸ்து தேவனுடையவர் (1 கொரி. 3:21-23) அவராலேயன்றி நாம் எதுவும் செய்யக் கூடாது.

# ஏன் சிலர் சமாதானமுள்ளவர்களாகவும் மற்றவர்கள் சமாதானமற்றவர்களாகவுமிருக்கிறார்கள்

## *Why some people have peace and others do not*

Bill Cliff

**"உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு, அவர்களுக்கு இடறலில்லை"** *சங்.119:165.*

சிலர் எப்போதும் குழப்பத்துடனேயே இருக்கிறார்கள். வாழ்வு அவர்களுக்கு ஒழுங்கற்றதாகவே காட்சியளிக்கிறது. அவர்கள் எப்போதும் அதிர்ச்சியுடனும், விசாரத்துடனும் ஆத்திரத்துடனும் காணப்படுகிறார்கள். தங்களைச் சுற்றிலும் நடைபெறும் சம்பவங்களால் திகைப்புடனும் மூச்சுவிடக் கூடாத திணறலுடனும் பாரத்துடனிருக்கிறார்கள். இடைவிடாத கவலையுடன் தங்கள் பணிகளை ஆற்றுகிறார்கள். இவர்கள் அவிசுவாசிகளல்ல. அவர்களில் அநேகர் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள்தான். ஆனால் சமாதானம் அவர்களைவிட்டு நழுவிவிட்டது.

இன்னொரு புறத்தில் சமாதானம் நிரம்பிய ஒரு கூட்டத்தினரைப் பார்க்கிறோம். அவர்களுடைய வாழ்வு சுறுசுறுப்பாயிருந்தாலும் அவர்களில் அமைதலான சந்தோஷமுண்டு, அது இளைப்பாறுதல் நிறைந்த சந்தோஷம். இவ்வுலக சந்தோஷத்திற்கு எதிரானது.

### இவற்றிற்கு வேறுபாடு என்ன?

'உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு'. இது எளிதாகச் செய்யக்கூடியது. ஆனால் பல்வேறு காரணங்களால் சிலர் அனுதினமும் தேவனுடைய சத்தம் கேட்பதின் அடிப்படை மதிப்பை அறிந்திருக்கிறார்கள். இந்த அறிவு வேதத்தை ஜெபத்தோடு வாசிப்பதின் மூலம் அதில் கவனம் செலுத்தத் தூண்டுகிறது. எனவே அதிக சமயத்தை அதற்காக எடுத்துக் கொள்கிறார்கள். எனவே தேவனுடைய சத்தியங்கள் அவர்களை உறுதிப்படுத்தி தங்கள் வாழ்வை தேவனுடைய கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள். புயல்களின் மத்தியிலும் அவர்கள் தேவனுடைய சத்தத்தைக் கேட்பதால் உடனடி சமாதானத்தைப் பெறுகிறார்கள்.

சங்கீதக்காரன் இத்தகைய சமாதானத்தை நிறைவாக பெற்றவர். தேவ வசனத்தை வாஞ்சித்து அதன் மூலம் விடுதலையையும் சமாதானத்தையும் அளவில்லாமல் பெற்றவர். அவருடைய சாட்சியைக் கீழ்க்காணும் வசனங்களில் காணலாம்.

"உம்முடைய கற்பனைகளை நான் வாஞ்சிக்கிறபடியால் என் வாயை ஆவென்று திறந்து, அவைகளுக்கு ஏங்குகிறேன்" *சங்.119:13.*

"உமது வார்த்தை மிகவும் புடமிடப்பட்டது, உமது அடியேன் அதில் பிரியப்படுகிறேன்" *வச.140.*

"..... உமது கற்பனைகள் என் மனமகிழ்ச்சி" *வச.143.* "அதிகாலையில் நான் எழுந்து சத்தமிட்டேன்; உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன்; உமது வசனத்தை தியானிக்கும்படி குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக் கொள்ளும்" *வச.147, 148.*

"..... என் இருதயம் உமது வசனத்திற்கே பயப்படுகிறது; ..... மிகுந்த கொள்ளையுடைமையைக் கண்டுபிடிக்கிறவன் மகிழுகிறது போல நான் உமது வார்த்தையின் பேரில் மகிழுகிறேன். ..... உம்முடைய வேதத்தையோ நேசிக்கிறேன்" *வச.161-163.*

பலவேளைகளில் பற்பல கவலைகளில் மூழ்கி கவலையான எண்ணங்களால் தூக்கமற்றிருந்தேன். அப்போதெல்லாம் என் உள்ளத்தின் ஆழத்தில் தேவசமாதானம் ஒளியாக விளங்க வேத வசனத்தை வாசிப்பேன். தேவனிடம் நான் திரும்ப இரவிலும் அவர் எனக்காகக் காத்திருக்கிறார். எனவே அவர் என் இருதயத்தை அமைதிப்படுத்தி என் சமாதானத்தைத் திரும்ப அளிக்கிறார்.

எனவே வேதவசனத்தை அதிகமாக நேசிக்கிறேன். அது மகாப்பெரிய சமாதானத்தைக் கொண்டு வருகிறது.

பிதாவே நான் தூரமாகப் போகவிடாதேயும். கவலை என்பது எச்சரிப்பின் தொனியாக என்னை விழிப்படையச் செய்யட்டும். நான் உம்மையே பார்க்கட்டும். உமது வார்த்தையை நான் கனப்படுத்தி உம்மிடம் ஓடிவரட்டும். இரவுக் காவலை நான் விரும்பி, தூக்கத்தை உதறிவிடட்டும். இவ்வாறு என் ஆத்துமாவை அமைதிப்படுத்தும். உம்முடைய சத்தத்தை மட்டும் நான் கேட்கட்டும்.

# ஒரு பாரமுள்ள தாழ்மையான ஜெபத்திற்கு தேவன் எப்படி பதிலளிக்கிறார்?

## *How God responds to a burdened humble prayer*

Bill Cliff

தானியேலின் புஸ்தகம் 9-ம் அதிகாரத்தில் வேத புத்தகத்திலுள்ள ஒரு மிகப்பெரிய ஜெபத்தைக் காண்கிறோம். அது நெகேமியாவின் முதல் அதிகாரத்திலுள்ள ஜெபத்தைப் போன்றது. தானியேல் தனது ஆத்துமாவை தேசத்திற்காக ஊற்றி ஜெபிக்கிறான். அது நமக்கு ஒரு மாதிரியான ஜெபம். வார்த்தைக்கு வார்த்தை தேசத்திற்காகக் கண்ணீர் விடும் ஜெபமாக அது காணப்படுகிறது.

தேவன் இந்தத் தாழ்மையான மனந்திரும்புதலின் ஜெபத்தைக் கேட்கிறாரா? அடுத்த அதிகாரத்திலே ஜெபத்தைக் கேட்டு பதில் கொடுக்கிற தேவ செயலைக் காண்கிறோம். தேவன் வருகிறார் *தானி.10:4-6.*

"முதலாம் மாதம் இருபத்து நாலாந்தேதியிலே நான் இதெக்கேல் என்னும் பெரிய ஆற்றங்கரையிலிருந்து என் கண்களை ஏறெடுக்கையில் சணல் வஸ்திரந்தரித்து, தமது அரையில் ஊப்பாசின் தங்கக் கச்சையைக் கட்டிக் கொண்டிருக்கிற ஒரு புருஷனைக் கண்டேன். அவருடைய சரீரம் படிகப் பச்சை போலவும் அவருடைய முகம் மின்னலின் பிரகாசத்தைப் போலவும், அவருடைய கண்கள் எரிகிற தீபங்களைப் போலவும், அவருடைய புயங்களும் அவருடைய கால்களும் துலக்கப்பட்ட வெண்கல நிறத்தைப் போலவும், அவருடைய வார்த்தைகளின் சத்தம் ஜனக்கூட்டத்தின் ஆரவாரத்தைப் போலவும் இருந்தது." நீங்கள் இவரைக் குறித்து கிறிஸ்துவின் முன் அவதாரம் என்றோ வல்லமையுள்ள தூதன் என்றோ எண்ணலாம். இவர் வானத்திலிருந்து இறங்கி வந்த ஒரு செய்தியாளர். தேவனே வந்துவிட்டார், தேவன் பேசுகிறார் *தானி.10:11.*

"அவர் என்னை நோக்கி : பிரியமான புருஷனாகிய தானியேலே நான் இப்போது உன்னிடத்திற்கு அனுப்பப்பட்டு வந்தேன், ஆனால் நான் உனக்குச் சொல்லும் வார்த்தைகளின் பேரில் நீ கவனமாயிடிருந்து, கால் ஊன்றி நில் என்றான். இந்த வார்த்தையை அவன் என்னிடத்தில் சொல்லுகையில் நடுக்கத்தோடே எழுந்து நின்றேன்.

தேவன் கேட்கிறார் : "அப்பொழுது அவன் என்னை நோக்கி : "தானியேலே பயப்படாதே, நீ அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்துகிறதற்கும், உன் மனதை செலுத்தின நாள் துவங்கி, உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது" *தானி.10:12.*

சத்துரு தேவ பணியைத் தடுக்கிறான் : *தானி.10:13.*

"பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாள் மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான். ஆனாலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவியாக வந்தான். ஆதலால் நான் அங்கே பெர்சியாவின் ராஜாக்களிடத்தில் தரித்திருந்தேன்"

நமக்கும் தேவையான புரிந்து கொள்ளுதலையும் தேவன் தருகிறார் :

*தானி.10:14* இப்போதும் கடைசி நாட்களில் உன் ஜனங்களுக்குச் சம்பவிப்பதை உனக்குத் தெரியப் பண்ணும்படிக்கு வந்தேன்.

தேவன் எல்லாவற்றையும் நமக்குத் தருவதில்லை. நமக்குத் தேவையானவற்றையும், நாம் விசுவாசிக்கிறவைகளையும் அவர் தருகிறார்.

நமது எதிர்காலத்துக்கு அவரது வாக்குகள் நமக்கு நம்பிக்கையை அளிக்கின்றன. நமது எதிர்காலம் அவர் கரங்களில் பத்திரமாயிருக்கிறது. அவர் வெற்றிவீரர். அவரோடிருப்பவர்களும் வெற்றி பெறுவர். அடிக்கடி ஜெபத்தில்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

தேவன் மிக முக்கியமான காரியங் களுக்கான வாக்குத்தத்தங்களை விசுவா சிக்க சொல்லுகிறார். "இப்பொழுதும் கடைசி நாட்களில் உன் ஜனங்களுக்குச் சம்பவிப்பதை உனக்குத் தெரியப் பண்ணும் பொருட்டு வந்தேன். இந்தத் தரிசனம் நிறைவேற இன்னும் நாள் செல்லும் என்றார் தானி.10:14.

அவரது வார்த்தைகள் சமா தானம், தைரியம், பெலன் போன்ற நமது தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

19-ம் வசனத்தில் பிரியமான புருஷனே பயப்படாதே, உனக்குச் சமாதானம் உண்டாவதாக, திடன் கொள், திடன்கொள் என்றான். இப்படி அவன் என்னோடே பேசுகையில் நான் திடன் கொண்டு அவனை நோக்கி : என் ஆண்டவன் பேசுவாராக, என்னை திடப்படுத்தினீரே என்றேன்.

நமது பணி கடைசி மட்டும் உத்தமமாயிருந்தால் பரிசும் உண்டு என்று தேவன் நினைவுபடுத்துகிறார்.

"நீயோவென்றால் முடிவு வருமட்டும் போயிரு நீ இளைப்பாறிக் கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய் என்றார் தானி.12:13.

பிதாவே, நாங்கள் உத்தமமாய் ஜெபிக்கும்போதும், உம்மைத் தேடும் போதும் நீர் பதில் தருகிறீர். நீர் எங்கள் ஜெபங்களை கேட்கிறீர். இது எத்தனை ஆசீர்வாதமானது! எங்களுக்குத் தேவை யானவைகளை மட்டும் விசுவாசத்துடன் ஜெபித்துப் பெற்றுக்கொண்டு விசுவாசத் தில் வளர உதவி செய்யும்.

# நாம் மேற்கொள்ளுகிறோமா மூடி மறைக்கிறோமா?

## *Are we overcoming or covering over?*

தேவன் நம்முடைய வாழ்வில் அவருக்கு நேராகவும் ஒருவருக்கொரு வரும் காணப்படும் அன்பு ஆகியவற்றில் உத்தமத்தை எதிர்பார்க்கிறார். "ஆண்ட வரே, நான் எவ்விதத்திலாவது குறைவு பட்டிருந்தால் அல்லது அனுபவத்தில் ஏதேனும் உத்தமமின்மை காணப்படு கிறதா என்பதை காண்பியும்" நான் தூங்குகிறவனாகவும் வேதவசனத்துக்கு முரணான எதையும் நான் நம்பாமலும் இருப்பதைவிட அவரது மிகக்கூரிய ஆயுதம் என்மீது பட தேவனை நோக்கிக் கூப்பிடுகிறேன். கிறிஸ்துவின் வருகை மிக சமீபமா யிருப்பதால் மேற்பூச்சான காரியங்களை விட்டுவிடுவோம்.

### வாழ்வில் ஆண்டுகொள்ளுதல்

"அல்லாமலும் ஒருவனுடைய மீறுதலினாலே அந்த ஒருவர் முலமாய் மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபை யின் பரிபூரணத்தையும், நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர் கள் இயேசுக் கிறிஸ்து என்னும் ஒருவ ராலே ஜீவனை அடைந்து ஆளுவார்கள் என்பது அதிக நிச்சயமாமே" ரோமர் 5:17.

நிச்சயமாக வாழ்வில் ஆளு வோம்? நாம் மேற்கொள்ளுகிறவர்களா அல்லது தோராயமாக இருக்கிறோமா, தேவன் ஒருபோதும் சராசரியாக கணக் கிடுவதில்லை. அவர் ஒருபோதும் ஒரு தவறான முடிவை கூறுவதில்லை. உத்த மமும் உண்மையுமாய் இராதவர்களை "வாருங்கள், உத்தமமும் உண்மை யுமுள்ள ஊழியக்காரரே" என்று அவர் ஒருபோதும் அழைப்பதில்லை.

"அவனவனுடைய வேலைப் பாடு வெளியாகும்" 1 கொரி.3:13. எனவே எப்படி ஜெபிக்க வேண்டும்! "ஆண்ட வரே, எங்கள் சேவையில் கடந்து வாரும், எங்கள் தொழிலில் கடந்து வாரும். இப்போதே எங்கள் அனுபவங்களையும் சீர்தூக்கிப் பாரும்". அது அக்கினியால் பரிசோதிக்கப்பட்டு நாம் கட்டியது மரம் வைக்கோல் அல்லது புல்லா என்று கண்டறியப்படும்.

நமது சாட்சிகளிலும் உத்தம மின்மை காணப்படுகிறது. பரிசுத்தமான வார்த்தைகளை பயன்படுத்த கற்றுக் கொண்டோம். ஆனால் வாழ்வில் அதன் பின்னால் உண்மையில்லை. சிலுவையை பற்றி நாம் சரளமாகப் பேசுவதற்கு முன்னாலும் அல்லது நாம் பிரித்தெடுக்கப் பட்டு சுத்திகரிக்கப்படுவதைக் குறித்துக் கூறுவதற்கு முன்னாலும் நமது வார்த் தைகளை ஆதரிக்கிற அனுபவம் நம்மில் உண்டா என்று பார்க்க வேண்டும்.

### அனுதினமும் மேற்கொள்ள வேண்டும்

தேவன் நமது பிள்ளைகளின் இருதயத்தின் ஆழங்களை ஊடுருவிப் பார்க்கிறவர். நாம் வாழ்வில் ஆளுகிறவர் களாயிருக்க உதவியாயிருப்பவர். இயேசு கிறிஸ்து ஒருவரே கிறிஸ்துவோடு ஆளுவதற்கான குணாதிசயத்தை நாம் பெற தேவன் கடினங்களை சத்துருவின் தாக்குதல் மூலம் நமக்கு அனுப்புகிறார். சிட்சைக்கு காலமும் பயிற்சியும் வேண்டும். அதை தேவனுடைய கிருபை ஒரே நிமிடத்தில் செய்ய முடியாது. ஒரு தேர்ச்சியடைந்த கிறிஸ்தவனைக் கிருபை ஐந்து நிமிடங்களில் உருவாக்க முடியாது.

தேவ கிருபையின் மூலம் நம்மைச் சுற்றிலும் வாழும் மக்களோடு நாம் ஒத்துப்போக முடியாவிட்டால் நாம் கிறிஸ்துவுடனே அரசாளுகிறவர் களல்ல. அரசாளுவது என்பது மேற் கொள்ளுவதாகும். நாம் வைக்கப்பட்ட இடத்தில் நாம் மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் அவர் கடினமான அனுபவங்களைத் தந்து மேற்கொள்ளப் பழக்குவிக்கிறார். இவ்வுலகில் சிறிய காரியங்களில் மேற்கொள்ள முடியாத வர்கள் எப்படி பரத்தில் சிங்காசனத்தில் அவரோடு அரசாள முடியும்? நம்மைச் சுற்றி இருப்பவர்கள் தூதர்களாயிருக்க நாம் விரும்பினால் நாம் தேவனுக்குள் ஆழமாக வாழவில்லை என்பதுதான் பொருள்.

பிலிப்பி.3:14-ல் பவுல் "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்கிறார். வரப்போகிற வாழ்வில் கிறிஸ்துவோடு கூட சிங்காசனத்தில் அரசாள இவ்வுலகில் சாத்தானையும் உலகத்தையும், சுயத்தையும் அடக்கி ஆள வேண்டும்.

### எல்லாவற்றிலும் கர்த்தரோடு ஒன்றாக

நம்மைப் பரிசுத்தப்படுத்த கிறிஸ்து மரித்தார். அன்புதான் எல்லா வற்றிலும் நாம் இயேசுவைப் போல ஆக நம்மை மறுபடியும் மறுபடியும் ஆராய்கிறது. "அப்படியே கர்த்தரோடி சைந்திருக்கிறவனும் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறேன்" 1 கொரி. 6:17. நாம் எல்லாக் காரியங்களிலும் ஆண்டவரோடு ஒன்றாயிருக்கிறோமா? தேவனுக்கும் நமக்கும் இடையில் ஏதோ ஒரு இடை யூறு இருப்பதை நாம் அறியாமலிருப்பது துக்கமானது. நமது வாழ்வில் ஆண்ட வருக்கு முதலிடம் அளிக்கிறோமா?

தூய ஆவியானவர் நம்மை மறுபடியும் கல்வாரிக்கு திருப்புகிறார். வேல்ஸ் எழுப்புதலைக் குறித்து எழுதும் போது, கல்வாரிதான் அதற்குக் காரணம் என்கிறார் ஈவன் ராபர்ட்ஸ். தனது ஆத்துமாவில் ஏற்பட்ட போராட்டத் தால், 'ஆண்டவரே என்னை வளையும், என்னை வளையும்' என்று கதறினார். இதைச் சொல்லக் காரணமாயிருந்தது, அவர் கல்வாரியின் சம்பவத்தால் அவர் அசைக்கப்படவில்லை. கல்வாரி அன்பால் இரட்சிக்கப்பட்ட அவர் எப்படியோ தமது உணர்ச்சிகளால் ஆண்டவரின் பாடுமரணத்தால் அசைக்கப்படாம லிருந்தபோது 'ஆண்டவரே என்னை வளையும் என்னை வளையும்' என்று கத்தினார். தூய ஆவியானவர் "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த அன்பை விளங்கப் பண்ணுகிறார்" ரோமர் 5:8 என்ற வசனத்தை அவருக்குக் காண்பித்தார். அந்த அன்பு ஈவான் ராபர்ட்ஸ் தம்மை ஒப்படைக்கப் போதுமானதாயிருந்தது.

இந்த அன்பு நமக்குரியவைகளை அர்ப்பணிக்க நம்மை நெருக்கி ஏவு கிறதா? ஆண்டவர் நம்மை அழைக்கிறார். நாம் நமது வாழ்வினை கிறிஸ்துவுக்காக அர்ப்பணிக்கவும் அவரது சுயநலமற்ற அன்பினையும் பயபக்தியையும் அவருக்குக் காண்பிக்க ஆயத்தமா?

ஜெபியுங்கள்! **எழுப்புதலுக்காக இதய கதறல் 2022** பங்கு பெறுங்கள்!
(உயிர்மிட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

**இடம் :**
**St. Mathiya Church (C.S.I.)**
Meerankulam 628 613
Tuticorin Dist.

**காலம்:**
12-03-2022, 2-வது சனிக்கிழமை
காலை மணி 10.00 முதல்
மாலை 5.00 மணிவரை

**மொபைல்:**
95432 21008
94897 40295

# நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு

***Watch thou in all things***

Haratius Bonar (1808-1889)

பரிசுத்தமாக வாழ விரும்புகிறவர்கள் "எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவர்களாயிருக்க வேண்டும்" 2 தீமோ.4:5. "விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன் கொள்ளுங்கள்" 1கொரி.16:13. இரவின் பிள்ளைகள் தூங்கவோ இருளில் இடறவோ செய்யட்டும். ஆனால் பகலுக்குரியவர்களாகிய நாம் தூங்காமல் விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்.

"..... பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு (அவிசுவாசம்) .... நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" எபி.12:1. 1தீமோ 6:11-ல் கூறப்பட்டபடி நீதி நற்குணம், விசுவாசம், அன்பு, பொறுமை, சாந்தம் ஆகியவற்றைப் பின்பற்றுவோம். நமது கண்கள் வரப்போகிற ஆண்டவராகிய இயேசுவின் ராஜ்யத்தின் மேல் நோக்கமாயிருக்க வேண்டும். கிறிஸ்தவன் எந்த ஒரு விதத்திலும் பாவத்தோடு சிறிய தொடர்பும் வைக்கக் கூடாது.

## நம்மில் வாசம் செய்யும் அன்பின் ஆவியானவர்

அன்பின் ஆவியை உடையவர்களாகிய நாம் அன்பு நிறைந்தவர்களாயிருக்க வேண்டும். பொறாமை, மாய்மாலம், தீமையான பேச்சு ஆகியவற்றை விட வேண்டும். "ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்" ரோமா.13:8. ஏனெனில் ஆவியானவர் சோம்பலாகளோ பயனற்றவராகவோ இருப்பதில்லை. அவர் கனிதருகிறவர். மனித இருதயங்களில் அவர் பரலோகக் கனிகளையும் உலக மண்ணில் தெய்வீகக் கனிகளையும் உருவாக்குகிறார். எனவே இதற்கு ஆதாரமாயிருப்பது நம்மில் வாசமாயிருக்கும் மகிமையான ஆவியானவர் என்று கண்டுகொள்கிறோம் (கலா.5:22-23 படிக்க)

தேவனோடுள்ள ஜெப உறவு நமக்கு வலுவாகட்டும். தேவனோடுள்ள நெருங்கிய உறவு இக்காலகட்ட தீமைகளிலிருந்து நம்மை விலக்கிக் காக்கும். தேவனோடுள்ள நெருங்கிய ஐக்கியம் இவ்வுலகின் தீய உறவுகளை விட்டுப் பிரிக்கும்.

பழைய மனிதன் நம்மில் எந்த வடிவத்திலும் காணப்படாமல் ஜாக்கிரதையாயிருப்போம். சோம்பல், கோபம், குளிர் நிலை, முரட்டாட்டம், கீழ்ப்படியாமை, அசுத்தம், இச்சை, பொறுப்பின்மை, சுயஏமாற்றம், பெருமை, தந்திரம், பிடிவாதம், எரிச்சல், புத்தியீனம், பிரசித்திபெறும் முன்னார் வம் ஆகியவற்றை விட்டுவிடுவோம். மெல்லிய மனச்சாட்சியைப் பெற்று சிறிய பாவங்களுக்கும் எச்சரிக்கையாயிருப்போம். கடமை தவறாமல் வாழுவோம். காலத்தை ஆதாயம் செய்வோம். ஆனாலும் வேகம் வேண்டாம். அமைதியாகவும் மகிழ்ச்சியுடனும், திறந்த மனதுடனும், தாராள சிந்தையுடனும், சுயநலமற்றும் பிறர் நலத்துடனும் செயல் படுவோம்.

## உறுதியும் உத்தமமும்

கிறிஸ்துவின் சீஷராக நமது சீஷத்துவம் பூரணமாகவும் நிலையாகவுமிருக்க அவரோடுள்ள நெருங்கிய உறவின் மூலம் அவர் சாயலைப் பெற்று அவரையே காண்பிக்கிறதாயிருக்க வேண்டும். நம்மைக் குறித்த சாட்சி உத்தமமானதாகவும் அழகியதாகவுமிருக்க வேண்டும். கிறிஸ்துவின் சத்தியம் நம்மை சுத்திகரிப்பதோடு நமக்கு விடுதலையும் அளிக்கிறது. அவரது ஞானம் பரிசுத்தப்படுத்துவதோடு உயிர்ப்பிக்கவும் செய்கிறது. இந்த விடுதலையை பரிசுத்தமில்லாமலும், ஞானத்தை சுத்திகரிக்கப்படாமலும், சமாதானத்தையும் அன்பையும் வாஞ்சையில்லாமலும் பெற முடியாது.

நாம் நமக்கு உண்மையுள்ளவர்களாகவும் நமது புதுப் பிறப்பிற்கு உண்மையுள்ளவர்களாகவும் புதிய பெயருக்கு உண்மையுள்ளவர்களாகவும் இருப்போம். தேவ சபைக்கும், நம்மில் வாசம் பண்ணும் ஆவியானவருக்கும் கிறிஸ்துவுக்கும் அவரது போதனைகளுக்கும் உண்மையாயிருப்போம். அவரைக் குறித்த வேதபுத்தகத்திற்கும் அதன் பாரத்திற்கும் கூட நாம் உத்தமமாயிருக்க வேண்டும். அதனைப் பசியோடு அனுதினமும் படிப்பதாலும் உட்கொள்வதாலும் கிருபையிலும் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவை அறிகிற அறிவிலும் வளருவோம்.

(2-ம் பக்க தொடர்ச்சி)

தூய ஆவியானவர் ஒருவரை சந்திக்கும்போது அவரில் அனேக மாற்றங்கள் ஏற்படும். நல்ல செய்திகளைப் பிரசங்கங்கள் மூலமாக அளிக்க முடியாத ஒரு ஊழியரை அறிவேன். அவரது காலத்தில் மக்களில் மனந்திரும்புதலில்லை. சபையாரின் எண்ணிக்கையும் குறைந்துகொண்டே வந்தது. தூய ஆவியானவர் அவரில் கிரியை செய்ய ஆரம்பித்தார். தெய்வீக அக்கினி அவரில் பற்றி எரிந்து அவரை உற்சாகப்படுத்தியது. அவரது நாவு தெய்வீக அக்கினியால் தொடப்பட்டது. அக்கினி பற்றி எரியும் உள்ளத்திலிருந்து அவர் பேச ஆரம்பித்தார். சபை நிரம்பி வழிந்தது. உலர்ந்த எலும்புகள் உயிர் பெற்றன. சபை உயிர் மீட்சி பெற்றது.

தேவ ஆவியானவர் மிகப்பெரிய அற்புதங்களைச் செய்கிறவர். அநேக பேர்க்கிறிஸ்தவர்கள் திடீரென்று தூய ஆவியால் நிரப்பப்பட்டு சபையில் உற்சாகமும் பயனுள்ள அங்கத்தினராக மாறுவதுண்டு. அது முதல் தேவ பணியில் அவர்கள் சிறந்து விளங்குகிறார்கள்.

உயிர்ப்பிக்கும் ஆவியானவர் என்மேலும் உங்கள் மேலும் அளவில்லாமல் இறங்கி வரட்டும். நம் ஒவ்வொரு வரையும் கர்த்தருக்கு பலத்த உண்மையான சாட்சிகளாக விளங்கச் செய்யட்டும். இந்த ஆசீர்வாதத்தை எவரும் இழந்து போக வேண்டாம். கேளுங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

**அறிவிப்பு**

**ஆசிரியர் 10 நாட்கள் சுகவீனமாயிருந்ததினாலும், ஆசிரியர் குடும்பம் ஒவ்வொருவராக சில நாட்கள் காய்ச்சலினால் அவதிபட்டதினாலும், சுமார் 10 நாட்கள் பத்திரிகை தாமதமாக அனுப்பப்படுகிறது.**

**Contact:**

**VARUKAYIN THOOTHAN**
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
**SOUTH INDIA.**

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

**சிந்தனைக்கு**

நமது **சபை**களில் நல்ல முன்னேற்றங்களைக் காண கிறிஸ்தவர்களின் எண்ணத்தில் **ஜெபக்கூடுகை** உயர் இடத்தில் வைக்கப்பட வேண்டும்.

தேவனை மகிமைப்படுத்தாமல் ஜெபத்தில் **தேவைகளை** மட்டும் முன்வைத்தால் நாம் தேவ வசனத்திற்கு **எதிராக** செயல்படுகிறோம்.

**பவுலும் சீலாவும்** அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டபோது அவர்கள் எந்த ஜெபசங்கிலியோடும் தொடர்பு கொள்ளவில்லை. எந்த நியாய சங்கத்தையும் நாடவில்லை. அவர்கள் தேவனைப் பாடித் **துதித்தார்கள்**.

தேவ **ஆவியான**வரை நாம் பார்க்க முடிவதில்லை. ஆனால் அவரது **கிரியை**யை நாம் உணர முடியும்.

**சபை**யின் செயல்பாடுகளில் அதிக கவனம் செலுத்தும் நாம் இணைந்து **ஜெபிப்பதின்** மூலமாகவே தேவ பிரசன்னத்தைப் பெறமுடியும் என்பதை மறந்து விடுகிறோம்.

*Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.*
*Editor : Wesley Devadason*